## திருப்பூர் மாவட்டத்தில் பேருந்து விபத்து!

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிதி உதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, பிப். 8-

திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி, செங்காளிபாளையம் கிராமம், சாம்ராஜ் பாளையம் பிரிவில் தனியார் பேருந்து கவிழ்ந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு - ஆறுதல் மற்றும் நிதியுதவி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு வருமாறு:

திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி வட்டம், கோவை - சேலம் தேசிய நெடுஞ் சாலை, செங்காளிபாளையம் கிராமம், சாம்ராஜ்பாளையம் பிரிவில் நேற்று (6.2.2025) காலை சுமார் 8.45 மணியளவில் திருப்பூரிலிருந்து ஈரோடு நோக்கிச் சென்றுகொண்டிருந்த TN34T4050 என்ற பதிவெண் கொண்ட தனியார் பேருந்து ஒன்று அதே திசையில் முன்னால் சென்ற கண்டெய்னர் லாரியைக் கடந்துசெல்ல முயன்றபோது எதிர்பாரா தவிதமாக நிலை தடுமாறி கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் பேருந்தில் பயணம் செய்த திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி வட்டம், விருமாண்டம்பாளையம், தில்லை நகரைச் சேர்ந்த திரு.பெரியசாமி (வயது 19) த/பெ.சந்திரன் மற்றும் குன்னத்தூர் கிராமம், சுண்டக்காம் பாளையத்தைச் சேர்ந்த திரு.ஹரிகிருஷ்ணன் (வயது 19) த/பெ.செந்தில்குமார் ஆகிய இரண்டு கல்லூரி மாணவர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியை கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.





புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணாவின் 56வது நினைவு நாளை முன்னிட்டு, அறந்தாங்கி நகர தி.மு.க. செயலாளர் க.ராஜேந்திரன் ஏற்பாட்டில், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர், தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ் ரகுபதி தலைமையில் தி.மு.க.வினர் கலைஞர் பேருந்து நிலையத்திலிருந்து ஊர்வலமாக சென்று அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர். மிசா. ராமநாதன், ஞான.இளங்கோவன், அடைக்கலம், ஸ்ரீதேவி அண்ணாதுரை, அபுதாஹீர், உதயம் சண்முகம், இரா.ஆனந்த், சக்தி ராமசாமி, பொன். கணேசன், எஸ்.எம்.சீனியார், வே.பொன்துரை, அழகு (எ) சிதம்பரம், அ.முத்து, வி.ஆர்.இளையராஜா, கே.சி.சிவக்குமார், வீரையா, த.மணிராஜன், பழனியப்பன், கே.ஆர்.ராமசாமி, முகமது யூனுஸ், பாத்திமா பீவி, கருணாகரன், சக்திவேல், விமலாதிராஜன், செந்தில்வேலன், கற்பகம் சந்திரசேகரன், மாரியப்பன், அன்பழகன், நசுருதீன், இரா.தமிழ் ராசு,, ஷாஜகான், அடைக்கலராஜா, சின்னையா, குத்புதீன், ஜோதி, வரதராஜன், கருணாகரன், பழனிச்சாமி, ராமசாமி, அனந்தராமன், ராஜேந்திரன் மாவட்ட, ஒன்றிய, நகர, வட்ட கிளைக் கழக நிர்வாகிகள், தொண்டர்கள் உள்ளிட்ட ஏராளமான தி.மு.க.வினர் கலந்து கொண்டனர்.

## கழக இளைஞரணிச் செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் புதுக்கோட்டை வருகை!

# புதுக்கோட்டை வடக்கு - தெற்கு மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் வேண்டுகோள்!

புதுக்கோட்டை, பிப்.8-

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் புதுக்கோட்டை மாநகர செயலாளர் மறைவெய்திய ஆ.செந்தில், மேயர் திலகவதி செந்தில் ஆகியோரது இல்லத் திருமணம், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா தந்தை கா.வைரக்கண்ணு திருவுருவப் படம், முன்னாள் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஸ்டாலின் நாராயணசாமி ஆகியோரது திருவுருவப் படத்தை திறந்து வைக்கவும் நாளை 9ந் தேதி புதுக்கோட்டை வருகை தர உள்ளார்கள். மதியம் 3 மணி அளவில் புதுக்கோட்டை மாவட்ட எல்லையான மாத்தூரில் புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து நல்லூர், கீரனூர் பைபாஸ், பொம்மாடி மலை, சத்திய மங்கலம், முத்துடையான் பட்டி, பாலன் நகர் , திருக்கோகர்ணம் ஆகிய இடங்களிலும் உற்சாக வரவேற்பு அளிக்கப்படுகிறது.





இந்நிகழ்வுகளில் புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு. பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பா ளர்கள், அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் எஸ்.ரகுபதி, வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் தமது அறிக்கையில் கூறி உள்ளனர்.

## அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரையாற்றுகிறார்!

# விழுப்புரத்தில் இன்று மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கௌதம சிகாமணி வேண்டுகோள்!

விழுப்புரம், பிப். 8-

இது குறித்து விழுப்புரம் (தெற்கு) மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி அறிக்கை வருமாறு:

ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை முழுமையாக புறக்கணித்துள்ள மோடி அரசை கண்டித்து கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் இன்று (08.02.2025 - சனிக்கிழமை) மாலை 5 மணிக்கு விழுப்புரம் புதிய பேருந்து நிலையம் அருகில் மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.



மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள இக்கூட்டத்தில் பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர், திருவண்ணாமலை தெற்கு மாவட்ட கழக செயலாளர் எ.வ.வேலு, தலைமை கழக பேச்சாளர் நாகம்மை கருப்பையா ஆகியோர் கண்டன உரையாற்றுகிறார்கள்.

நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில - மாவட்ட - ஒன்றிய - நகர - பேரூர் - கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் , பொது நல அமைப்புகளை சார்ந்தவர்கள் என தமிழர் நலன் விரும்பும் அனைவரும் தங்கள் கண்டனத்தை பதிவு செய்ய திரளாக பங்குபெற வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறன்

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டம், காட்டுக்கோட்டையில் நேற்று முன்தினம் (6.2.2025) நடைபெற்ற "மக்களுடன் முதல்வர் மூன்றாம் கட்ட திட்ட முகாமில் பெறப்பட்ட மனுக்களின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.ராஜேந்திரன் ஆகியோர் வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா. பொருந்தாதேவி, மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

## மத்திய மாவட்டக் கழகம் சார்பில் இன்று

# சேலத்தில் மாபெரும் கண்டனப் பொதுக் கூட்டம்!

## திருச்சி சிவா – கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் சிறப்புரை! மாவட்டச் செயலாளர் அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிக்கை!

சேலம், பிப். 8-

சேலம் மத்திய மாவட்டக் கழகம் சார்பில் சேலத்தில் நாளை மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் நாடாளுமன்ற மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா, கழக செய்தித் தொடர்புச் செயலாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர். எனவே இக்கூட்டத்தில் கழகத் தோழர்கள் திரளாகப் பங்கேற்குமாறு மாவட்டக் கழகச் செயலாளரும் சுற்றுலாத்துறை அமைச்சருமான இரா.இராஜேந்திரன் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



ஒன்றிய அரசின் பொருளாதார ஆய்வு அறிக்கையில் தமிழ்நாடு இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தை அடைந்தும் அதை பாராட்டுகின்ற மனப்பான்மை இன்றி ஒன்றிய நிதிநிலை அறிக்கை என்றாலே தமிழ்நாட்டுக்கு ஓர வஞ்சனை என்பது தொடர்கதையாகி விட்டது. தமிழ்நாடு அரசு பல்வேறு கோரிக்கைகளை ஒன்றிய அரசுக்கு வைத்தும் அனைத்திற்கும் பாராமுகமாய் அது நெடுஞ்சாலை திட்டமாக இருந்தாலும், ரயில்வே திட்டங்களானாலும், கோவை, மதுரை போன்ற பெருநகர மெட்ரோ ரயில் திட்டங்கள் ஆனாலும் எதையும் ஏற்காமல் தமிழ்நாடு தொடர்ந்து புறந்தள்ளப்பட்டு வருகிறது. தமிழ்நாடு ஏற்காத மொழி திணிப்பு உள்ளிட்ட மற்ற திட்டங்களை மீண்டும் மீண்டும் திணிப்பதில் காட்டும் ஆர்வத்தில் ஒரு துளிகூட தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு சிறு துளி ஆர்வமும் இன்றி ஒன்றிய அரசு செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டிற்கு சேர வேண்டிய திட்ட நிதியைக் கூட விடுவிக்காத ஒன்றிய அரசு தன்னை காப்பாற்றிக் கொள்ள பீகாருக்கும், ஆந்திராவுக்கும் நிதியை வாரி வழங்கி வருகிறது. எனவே இத்தகைய மத்திய அரசின் மாற்றாந்தாய் போக்கை கண்டித்து சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் இன்று (08.02.2025 - சனிக்கிழமை) மாலை 04.00 மணி அளவில் தாதகாப்பட்டி கேட் மைதானத்தில் மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

தி.மு.கழக கொள்கை பரப்பு செயலாளர், நாடாளுமன்ற மேலவை கழக குழு தலைவர் திருச்சி சிவா மற்றும் தலைமைக் கழக செய்தி தொடர்பு குழு செயலாளர் பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் ஆகியோர் கண்டன உரையாற்ற உள்ளார்கள்.

இக்கூட்டத்திற்கு சேலம் மத்திய மாவட்டக் கழக, மாநகரக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கழக, பகுதிக் கழக, பேரூர் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், மாவட்டக் கழக பிரதிநிதிகள், மாநகர வட்டக்கழக செயலாளர்கள், ஊராட்சி கிளைக் கழக செயலாளர்கள், பேரூர் வார்டு கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், இளைஞர் அணி, வழக்கறிஞர் அணி, மாணவர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, தொழிலாளர் அணி. மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, வர்த்தகர் அணி, இலக்கிய அணி. கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் அணி, நெசவாளர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதி திராவிடர் நலக்குழு அயலக அணி, சுற்றுச்சூழல் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி ஆகிய சார்பு அணிகள் உள்ளிட்ட அனைத்து அணிகளைச் சேர்ந்த மாவட்ட, மாநகர, ஒன்றிய பகுதி, பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் என அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் இரா. ராஜேந்திரன் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## தருமபுரி கிழக்கு மாவட்ட தி.மு.கழகம் சார்பில்

# தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசைக் கண்டித்து மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி அறிவிப்பு!

தருமபுரி, பிப். 8-

ஓரவஞ்சனையான நிதிப் பகிர்வு, தமிழ்நாட்டின் முக்கியத்திட்டங்கள் புறக்கணிப்பு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொடர்ச்சியான கோரிக்கைகளுக்குப் பிறகும் எஸ்.எஸ்.ஏ. பேரிடர் மேலாண்மை ஆகியவற்றுக்கு நிதி ஒதுக்காதது, ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு என்ற பெயரைக் கூட உச்சரிக்காதது என தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசைக் கண்டித்து கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆலோசனைப் படி இன்று (08.02.2025 - சனிக்கிழமை அன்று மாலை 5.00 மணி அளவில் பென்னாகரம் பேருந்து நிலையம் அருகில் மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம்பெ.சுப்ரமணி மற்றும் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, தலைமைக் கழக பேச்சாளர் குத்தாலம் அன்பழகன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர் ஆகவே நடைபெறும் இந்த கண்டன பொதுக் கூட்டத்தில் இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வார்டு கழக, கிளை கழக நிர்வாகிகள், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழகத் தோழர்கள் என திரளாக கலந்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.





# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–2 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெறுகிறது. இரண்டாம் கட்டமாக கடலூர் கிழக்கு & கடலூர் மேற்கு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 09.02.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 3.00 மணி | கடலூர் மேற்கு | தொ.மு.ச. அலுவலகம், நெய்வேலி, கடலூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 01-02-2025

